இடங்களில் எதாவது ஒரு இடத்திலே தாழ்த்தப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, அதன் பேரிலே இந்த இரண்டு பிரிவினரும் தாழ்த்தப்பட்ட சமூதாயத்திலே வருகிறார்களா என்று சட்டத் துறையைக் கேட்டு, அதற்குப் பிறகு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்குப் பிறகு, 14—10—1974 அன்று வடகலை வைணவர் இடம் காலியானது. ஆகவே அதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவை வந்திருக்கின்றன. அவை இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் தென் கலை, வட கலை என்ற பிரிவினர் இருக்கின்றனரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இருப்பதாகத்தான் சொல்கிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இப்பொழுது மூன்று இடங்கள் காலியாகி உள்ளன. தென் கலை, வட கலை, மத்வர் ஆகிய மூன்று பிரிவுகளில், எந்தப் பிரிவு இடத்திற்கு தாழ்த்தப்பட்டவரை நியமிப்பதாக அரசு பரிசீலனை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எந்தப் பிரிவிலே தாழ்த்தப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் வருகின்றார்களோ, அந்த இடத்திற்கு நியமிக்கப்படும்.

Renovation of Arulmigu Athitheeswar Temple

*161Q—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(a) whether there is any proposal with the Government to repair and renovate Arulmigu Athitheeswar Temple in Devasthanam village, Vaniambadi taluk, North Arcot district; and

(b) if so, the estimate of expenditure thereof?

அதிதீஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பித்தல்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலூக்கா தேவஸ்தானம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் திட்டம் எதும் உண்டா?

(இ) ஆமெனில், அதன் உத்தேச மதிப்பீடு யாது?

1975 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) உண்டு.

(இ) திருக்கோயிலின் திருப்பணி வேலைகளுக்கான ரூ. 37,000-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது ஆரம்பிக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அற நிலைய ஆட்சித் துறையினால் 21—6—1972-லேயே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திரு. வெங்கடேச முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக் குழு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோயில் வருமானம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், திருப் பணிக் குழுவினர் சரியான முயற்சியிலே ஈடுபடமுடியாத காரணத்தினாலும், போதுமான பணவசதி இல்லாமல் இந்த வேலை தடைபட்டுள்ளது. விரைவில் ஆரம்பித்து முடிப்பதற்கான நிலைமை எதிர்காலத்திலே ஏற்படலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

"நாத்திகம்" நாளிதழில் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட பகுதி பிரசுரிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற மேலவை 157-வது விதியின்கீழ் திரு வி. வெங்கா அவர்கள் கீழ்க்கண்ட உரிமைப் பிரச் சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அது பின்வருமாறு :

"மார்ச் திங்கள் 7 ஆம் நாள் மேலவை உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் பேசும்போது அவரது பேச்சின் ஒரு பகுதி முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி மேலவைக் குறிப்பிலிருந்து தலைவர் அவர்களின் ஆணைப்படி நீக்கப்பட்டு விட்டது. மேலவைத் தலைவர் அவர்களால் நீக்கப்பட்ட அப்பகுதி 8—3—1975 அன்றைய நாத்திகம் ஏட்டில் கட்டம் போட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.